இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 312 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 09 – செவ்வாய்க்கிழமை 23 ஜூன் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 312 : Thiruvalluvar Year - 2057 - Aani 09 - Tuesday 23 June 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


### 18–ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் எஸ்.டி.பி.ஐ. கட்சி தனது

# அரசியல் பயணத்தை வெற்றிகரமாகத் தொடர்ந்திட வாழ்த்துகள் !

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, ஜூன் 23 -

**“18-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் எஸ்.டி.பி.ஐ. கட்சி தனது அரசியல் பயணத்தை வெற்றிகரமாகத் தொடர்ந்திட உளமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

18ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் எஸ்.டி.பி.ஐ. கட்சிக்கு, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கியுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு :-

சிறுபான்மையினர் உரிமைகளைக் காக்கவும், சமூக அமைதி - சமூக நீதி - சம வாய்ப்பு - சமத்துவம், எளிய மக்களுக் கான அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட மேலான கோட்பாடுகளை இலக்காகக் கொண்டு இயங்கி வரும் இந்திய சமூக ஜனநாயகக் கட்சி (SDPI) 18ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதற்கு வாழ்த்துகள்!

எஸ்.டி.பி.ஐ. கட்சி, அரசியல் ரீதியாகப் பல்வேறு போராட்டங்களைக் கடந்து வளர்ந்து வந்திருக்கிறது. இதன் வளர்ச்சிக் கும், ஆக்கபூர்வமான அரசியல் பங்களிப்புக் கும் பாடுபட்டு வரும் எஸ்.டி.பி.ஐ. கட்சியின்



தேசியத் தலைவர் எம்.கே. ஃபைஜி அவர்கள், மாநிலத் தலைவர் முகமது முபாரக் அவர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் எனது பாராட்டுதலை யும், அன்பையும் தெரிவித்துக் கொள்கி றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணியில் முதல் முறையாக இடம்பெற்று, கடந்த சட்டப் பேரவைத் தேர்தலைச் சந்தித்த போதிலும், நீண்டகாலம் தோழமையுடன் இருப்பதைப் போன்ற உணர்வுடன் எஸ்.டி.பி.ஐ. கட்சி யின் நிர்வாகிகளும், தோழர்களும் முழு மூச்சுடன் கூட்டணியின் வெற்றிக்காக அயராது உழைத்தனர்.

பரப்புரைக்காக நான் சென்ற இடங் களில் எல்லாம், எஸ்.டி.பி.ஐ. கட்சியின் தோழர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, தங்களது ஆதரவையும், நல்லுணர்வை யும் வெளிப்படுத்தியதை இத்தருணத்தில் நினைவு கூர்கிறேன்.

எஸ்.டி.பி.ஐ. கட்சி எளிய மக்களின் மேம்பாட்டுக்காக என்றென்றும் ஊக்கத் துடன் தொடர்ந்து பாடுபட்டு வரவும், அரசி யல்ரீதியாக அதன் பயணத்தை வெற்றி கரமாகத் தொடர்ந்திடவும் எனது உள மார்ந்த வாழ்த்துகளை மீண்டும் தெரிவித் துக் கொள்வதோடு, சிறுபான்மை மக்கள் நலன் மீதான திராவிட முன்னேற்றக் கழகத்தின் அக்கறையும், ஆதரவும் என்றென்றும் தொடரும் என்பதையும் தோழமையுணர்வோடு இந்த நேரத்தில் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

---

### தஞ்சை

## மழையால் 50 ஆயிரம் நெல் மூட்டைகள் சேதம்!

### விவசாயிகள் அதிர்ச்சி!

தஞ்சை, ஜூன் 23 –

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே உள்ள பட்டீஸ்வரம் பகுதியில் நேற்று திடீரென இடி, மின்னலுடன் கூடிய பலத்த கனமழை, தொடர்ந்து 3 மணிநேரமாக பெய்துள்ளது.

இதனால் திறந்தவெளியில் பாது காப்பற்ற முறையில் அடுக்கி வைக்கப் பட்டிருந்த சுமார் 50,000 நெல் மூட்டை கள் தண்ணீரில் நனைந்து சேதமடைந் துள்ளன.

அந்த பகுதியில் திறந்தவெளி சேமிப்புக் கிடங்கில் லட்சக்கணக்கான நெல் மூட்டைகள் தற்காலிகமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

திடிரென மழைபெய்ததில் திறந்த வெளியில் இருந்த நெல் மூட்டைகளை மூடிப் பாதுகாப்பதற்குத் தேவையான போதிய தார்ப்பாய்கள் அங்கு இல்லை என்ற காரணத்தால் அடுக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகளில் மழை நீர் புகுந்து முழுமையாக நனைந்து சேதமடைந்தன.

கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை உடனுக்குடன் அரவை ஆலைகளுக்கு அனுப்பி வைக்காமல், பல மாதங்களாக ஒரே இடத்தில் அலட்சியமாகத் தேக்க வைத்ததே இந்த இழப்பிற்குக் காரணம் என்று விவசாயிகள் வேதனையடைந் துள்ளனர்.

தற்போது நனைந்துள்ள நெல் மூட்டை களை உடனடியாக உலர வைக்கவோ அல்லது நவீன உலர் கலன்களுக்கு மாற் றவோ தவறினால், நெல் மணிகள் அனைத்தும் முளைக்கத் தொடங்கி முற்றிலும் பயன்பாடற்றுப் போய்விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

விவசாயிகளின் ரத்தமும் வியர்வை யும் கலந்த உழைப்பு கண் முன்னே வீணாவதைத் தடுக்க, அரசு உடனடியா கத் தலையிட்டு நனைந்த நெல் மூட்டை களை போர்க்கால அடிப்படையில் கொள்முதல் செய்ய வேண்டும் என்றும், அலட்சியமாகச் செயல்பட்ட அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றும் டெல்டா பகுதி விவசாய சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

---

### கோயில் நிதி:

## கல்விக்கு செலவிட த.வெ.க. அரசு தடை!

### பொதுமக்கள் கண்டனம்!

சென்னை, ஜூன் 23 -

கோயில்களின் வருவாயில் உபரியாக உள்ள நிதியைக் கொண்டு கல்வி நிலையங்கள், மருத்துவமனைகளுக்கு செலவிடும் திட்டத்தை த.வெ.க. அரசு ரத்து செய்துள்ளதற்கு பொதுமக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கோயில்களின் வருவாயில் இருந்து கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட சமூக நலத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதை த.வெ.க. அரசு ரத்து செய்துள்ளது. கோயில் நிதி ஆன்மிகப் பணிகளுக்கு மட்டுமே என த.வெ.க. அரசின் ஆளுநர் உரையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோயில் நிதி உபரியாக உள்ளபோது அதைக் கொண்டு கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் சமூக நலப் பணிகளைச் செயல்படுத்துவதில் தவறில்லை என்றும், அரசின் இந்த முடிவு அரசியல் காழ்ப்புணர்ச்சி மற்றும் விளம்பரநிலை மக்களின் கல்வி வளர்ச்சியைத் தடுக்கும் நோக்கம் கொண்டது என்றும் கல்வியாளர்கள் விமர்சித்து வருகின்றனர்.

கோவில் காசு ஏழைகளின் கல்விக்கு உதவினால் என்ன தப்பு? என் மையன் இந்த நிதியில் நடைபெறும் கல்லூரியில் தான் படிக்கிறான், இதை நிறுத்துவது ரொம்ப தப்பு என பொதுமக்கள் சமூக வலை தளங்களில் பதிவிட்டுள்ளதை தி.மு.க. ஐ.டி. விங்க் சுட்டிக் காட்டி உள்ளது.

---

### கல்வி காவிமயம்! மாணவர்களின் உயிரைக் காவு கேட்கும் ‘நீட்’ தேர்வு!

# ஒன்றிய மோடி பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழக மாணவர் அணி சார்பில் இன்று நடைபெறுகிறது!

சென்னை, ஜூன் 23 -

**“கல்வி காவிமயம், மாணவர்களின் உயிரைக் காவு கேட்கும் ‘நீட்’ தேர்வு! ஒன்றிய மோடி பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம், கழக மாணவர் அணி சார்பில் இன்று சென்னை - சைதாப்பேட்டையிலுள்ள கலைஞர் பொன்விழா வளைவு அருகில் காலை 9 மணியளவில் நடைபெறுகிறது.**

இதுகுறித்து கழக மாணவர் அணிச் செயலாளர் ஜெ.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பாசிச பா.ஜ.க. அரசால் இந்தியா முழுவதும் திணிக்கப் பட்ட ‘நீட்’ தேர்வில் ஒவ்வொரு ஆண்டும் மோசடிகள் முறைகேடு கள் அம்பலப்பட்டு வருகின்றன.

கழக ஆட்சியில் ‘நீட்’ தேர்வில் இருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இந்த ஆண்டு நடைபெற்ற ‘நீட்’ தேர்வு இரத்து செய்யப்படுவதாக அறிவித்ததிலிருந்து மறு தேர்வு அச்சத்தால் இந்தியா முழுவதும் 15 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் இந்தியா முழுவதும் மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டு செத்து மடிகின்றனர். இது பாசிச மோடி அரசால் நிகழ்த்தப்படும் பச்சைப் படுகொலையாகும்.

இத்தகைய நுழைவுத் தேர்வு களையும் ‘தகுதித்’ தேர்வுகளை யும் இரத்து செய்யக் கோரி பாசிச மோடி அரசினை தி.மு.கழகம் தொடர்ந்து நிர்ப்பந்தித்து வருகிறது.

அதேபோல் ஒன்றிய பா.ஜ.க. அரசு மொழிவாரி மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதிலும், தாய்மொழியைத் துறக்கச்செய்து, இந்தி மற்றும் சமஸ்கிருத மொழி களை மக்களிடையே திணித்து அவர்களை இரண்டாந்தரக் குடி மக்களாக ஆக்கும் சதிச் செயலில் ஈடுபட்டு வருகிறது. 2014-ஆம் ஆண்டு ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைந்ததிலிருந்தே, தமிழ் நாட்டில் வடமொழித் திணிப்பை கல்வி நிலையங்களில் பாடத்திட் டம் வழியாகவும் இதர பல்வேறு வகைகளிலும் செய்து வருகிறது.

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டித்துள்ளார்!**

தற்போது ஒன்றிய அரசுப் பள்ளிகளில் (CBSE) 9-ஆம் வகுப்பி லிருந்து 12-ஆம் வகுப்பு வரை சமஸ்கிருத மொழியைக் கற்க வேண்டும் எனும் திட்டத்தைச் செயல்படுத்திட ஒன்றிய மனிதவள மேம்பாட்டுத் துறை ஆணை பிறப்பித்துள்ளது.

இதனைத் திராவிட முன்னேற் றக் கழகத்தின் தலைவர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வன்மையாகக் கண்டித் திருக்கிறார்.

**மாணவர் அணி சார்பில் நாளை மாபெரும் ஆர்ப்பாட்டம்!**

எனவே, ஒன்றிய அரசின் இம்முயற்சிகளை தடுத்திட, கழகத் தலைவரின் அறிவுறுத்தலின்படி பா.ஜ.க. அரசின் ‘நீட்’ தேர்வு மற்றும் இந்தி, சமஸ்கிருத திணிப்பை கண்டிக்கும் வகை யிலும், அவற்றை ரத்து செய்ய வலியுறுத்தியும் தலைநகராம் சென்னை மாநகர், சைதையில் “கலைஞர் பொன்விழா வளைவு” அருகில், இன்று (ஜூன் 23 - செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணியளவில், தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இதில் அனைத்து மாணவர் அணி நிர்வாகிகள் அலைகடலென திரண்டு பங்கேற்றிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உயிர்க்கொல்லி நீட்தேர்வினை ஒழித்திடுவோம்!

வடமொழி திணிப்பை தடுத்திடு வோம்!

அண்ணா தந்த இருமொழி கொள்கையை போற்றிடுவோம்!

இவ்வாறு ஜெ.வீரமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## ‘நீட்’ மறுதேர்வு: ஓசூரில் மாணவர் தற்கொலை!

ஒசூர், ஜூன் 23 -

நாடு முழுவதும் நேற்று ‘நீட்’ மறு தேர்வு நடை பெற்ற நிலையில், ‘நீட்’ தேர்வு அச்சத்தால், ஓசூரில் மாணவர் ஒருவர் 3 பக்கம் கடிதம் எழுதி வைத்து விட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள பாகலூர் பகுதியைச் சேர்ந்த சின்ன சாமி-உத்திரகுமாரி தம்பதி யின் இளையமகன் வெற்றி ஆனந்தன், மருத்துவ படிப் பில் சேர்வதற்காக, நாமக் கல் பகுதியில் உள்ள ‘நீட்’ கோச்சிங் சென்டரில் சேர்ந்து படித்து வந்தார்.

ஏற்கனவே, 2 முறை ‘நீட்’ தேர்வில் தோல்வி யடைந்த நிலையில், கடந்த மே 3ம் தேதி நடை பெற்ற தேர்வை சிறப்பாக எழுதியிருந்ததாக கூறப் படுகிறது.

இந்நிலையில், வினாத் தாள் கசிவு உள்ளிட்ட முறைகேடுகள் காரண மாக அந்த தேர்வு ரத்து செய்யப்பட்டு, நேற்று நாடு முழுவதும் மறுதேர்வு நடத்தப்பட்டது.

இந்நிலையில், ‘நீட்’ மறு தேர்வு குறித்த அச்சத் தில் இருந்த மாணவர் வெற்றி ஆனந்தன், வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில், 3 பக்கத்திற்கு கடிதம் ஒன்று எழுதி வைத்து விட்டு, வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த ஒன்றரை மாதங் களில் மட்டும் நாடு முழுவ தும் 10க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

கோவையைச் சேர்ந்த மாணவி அனு கீர்த்தனா, ‘நீட்’ மறு தேர்வு அச்சத் தால் தற்கொலை செய்த நிலையில், நேற்று முன்தினம் சேலம் மாவட் டம் கொங்கணாபுரத்தைச் சேர்ந்த மாணவி கோபிகா தற்கொலை செய்து கொண்டார்.

இந்நிலையில், மாணவர் வெற்றி ஆனந்தன் தற் கொலை செய்துகொண்ட சம்பவம் பெரும் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.

---

## கோவை - சூலூர் அருகே 12 வயது பள்ளி மாணவி மாயம்!

கோவை, ஜூன் 23 -

கோவை மாவட்டம் சூலூரில் அண்மையில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து, படுகொலை செய்யப் பட்ட சம்பவம் தமிழ் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற் படுத்தி இருந்தது.

இந்த நிலையில், கோவை - சூலூர் அருகே 12 வயது மாணவி ஒருவர் மாயமாகியுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது.

12 வயது பள்ளி மாணவி நேற்று மாலை வீட்டில் இருந்து வெளியே சென்ற நிலை யில், பின்னர் அவர் மாய மாகியுள்ளார்.

சிறுமியை பல்வேறு இடங்களில் தேடியும் கிடைக்காத நிலையில், பெற்றோர் இது குறித்து காவல்துறையினரிடம் புகார் அளித்தனர்.

அதன் பேரில் போலீ சார் மாயமான சிறுமியை தேடி வருகின்றனர்.

இச்சம்பவம் அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சி யும், அச்சத்தையும் ஏற்ப டுத்தியுள்ளது.